RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 298 | அக்டோபர்.29 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## போர் சூழலுக்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும்: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பேச்சு

புதுடெல்லி, அக்.29-

இந்திய ராணுவம் எப்போதும் போர் சூழலுக்கு தயாரான நிலையில் இருக்க வேண்டும் என்று பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:



கடந்த மே மாதத்தில் பாகிஸ்தான் உடன் நடைபெற்ற நான்கு நாள் ராணுவ மோதல் எல்லைகளில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதை நமக்கு கோடிட்டு காட்டியுள்ளது. இந்த சம்பவம் நாம் சுயபரிசோதனை செய்து கொண்டு போர் போன்ற சூழ்நிலைக்கு எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானுக்கு இந்தியா உறுதியான பதிலடியை தந்தது. இருந்தபோதிலும் தேசிய பாதுகாப்பு சவால்களை கையாள்வதில் திட்டமிடலுக்கும், எதிர்கால நடவடிக்கையை கற்றுக்கொள்வதற்கும் இது ஒரு நல்ல பாடமாக அமைந்தது.

மே 7 முதல் 10 வரை மேற்கொள்ளப்பட்ட பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராணுவ உபகரணங்களை நாம் திறம்பட பயன்படுத்தியது, பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் இந்தியாவின் நற்பெயரை உயர்த்தியது.

ஆபரேஷன் சிந்தூர் சம்பவமானது நமது எல்லைகளில், எங்கும், எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதை மீண்டும் ஒரு முறை நமக்கு நினைவுபடுத்தியுள்ளது.

எந்த நேரத்திலும் எதிரிகளின் தாக்குதலை சமாளிக்க நாம் நமது சொந்த அடித்தள கட்டமைப்பை மட்டுமே நம்பியிருக்க வேண்டும். தற்போதைய உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் ஒவ்வொரு களத்தையும் ஆழமாக மதிப்பிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. சவால்களை சமாளிக்க சுதேசிமயமாக்கல் மட்டுமே ஒரே வழி.

உலக ஒழுங்கு கட்டமைப்பு பலவீனமடைந்து வருகிறது. பிராந்திய பகுதிகளில் மோதல்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சூழலில், இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் வியூகத்தை மறுவரையறை செய்யவேண்டியது அவசியமாகிறது.

சிந்தூர் நடவடிக்கையின் போது, ஆகாஷ் ஏவுகணை, பிரம்மோஸ், ஆகாஷ்தீர் வான் பாதுகாப்பு கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் இன்னும் பிற உள்நாட்டு உபகரணங்களின் சக்தியை உலகம் கண்டு வியந்தது. இதற்கான பெருமை அனைத்தும் நமது ராணுவத்தையே சாரும்.

பாதுகாப்பு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும், உள்நாட்டு சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கும் அரசு ஒரு சமமான களத்தை உருவாக்கி வருகிறது. இந்த வாய்ப்பை தொழில்துறையினர் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு ராஜ்நாத் சிங் பேசினார்.

## எல்விஎம்3 ராக்கெட் மூலமாக சிஎம்எஸ்03 செயற்கைக்கோள் நவ.2ல் விண்ணில் பாய்கிறது

சென்னை, அக்.29-

கடற்படை, ராணுவப் பயன்பாட்டுக்கான சிஎம்எஸ்03 செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்3 ராக்கெட் மூலம் நவம்பர் 2ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது. நாட்டில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இதுவரை 48 செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது.



அதில், கடந்த 2013ம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுள்காலம் விரைவில் முடிவடைய உள்ளது. அதற்கு மாற்றாக, சுமார் ரூ.1,600 கோடியில் அதிநவீன சிஎம்எஸ்03 (ஜிசாட்7ஆர்) செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்3 (ஜிஎஸ்எல்வி மார்க்3) ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் நவம்பர் 2ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

இதற்காக, ராக்கெட் பாகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அதில் விண்கலம் பொருத்தப்பட்டுள்ளது. பின்னர், ஏவுதளத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தயார் நிலையில் உள்ளது. சிஎம்எஸ் 03 செயற்கைக்கோள் 4,400 கிலோ எடை கொண்டது. இதுவரை புவிவட்ட சுற்றுப்பாதைக்கு ஏவப்பட்டதிலேயே இதுதான் அதிக எடை கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோள்.

இதில் விரிவுபடுத்தப்பட்ட மல்டி பேண்ட் தொழில்நுட்ப வசதிகள் உட்பட பல்வேறு நவீன அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இந்திய கடற்படை மற்றும் ராணுவத்தின் பணிகளுக்காக இந்த செயற்கைக்கோள் பயன்படுத்தப்பட உள்ளது. கடலோர எல்லைகளை கண்காணிப்பதுடன், போர்க் கப்பல்கள், விமானங்கள் இடையே பாதுகாப்பான தொலைத்தொடர்பு சேவையை மேம்படுத்தியும் வழங்கும்.

ஒட்டுமொத்தத்தில் இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கம். இந்த திட்டம், எல்விஎம்3 ராக்கெட்டின் 5வது ஏவுதல் ஆகும். இதற்கு முன்பு, சந்திரயான்3 விண்கலம் இந்த ராக்கெட் மூலமாக வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இந்தாண்டு 1,500 பேருக்கு டெங்கு பாதிப்பு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, அக்.29-

டெங்குவால் இந்தாண்டு 1,500 பேர் பாதிக்கப்பட்டதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் மேற்கொள்ளப்படும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் மற்றும் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நீலாங்கரையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: சோழிங்கநல்லூர் சட்டப் பேரவைத் தொகுதி 20 வார்டுகள் கொண்டுள்ள மிகப்பெரிய தொகுதி. முதல்வர் எடுத்த பிரத்யேக நடவடிக்கைகளால், புதிய மழைநீர் வடிகால்வாய்கள் ஏராளமாகக் கட்டப்பட்டன. நாராயணபுரம் ஏரி உபரிநீரால் பள்ளிக்கரணை, மடிப்பாக்கம் போன்ற பல்வேறு பகுதிகள் ஆண்டுதோறும் மிகப்பெரிய பாதிப்பை சந்திக்கும். இன்று அந்தப் பகுதிகளில் புதிய இணைப்புக் கால்வாய்கள் கட்டியதால் அந்தப் பகுதிகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இதுவரை டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு 2012ல் 66 பேர், 2017ல் 65 பேர் இறந்துள்ளனர். இதுதான் அதிக பட்ச உயிரிழப்புகள். இந்த அரசு அமைந்த பின் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளில் ஒற்றை இலக்கத்திலேயே டெங்கு இறப்பு உள்ளது. பாதிப்புகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு 1500ஐக் கடந்திருக்கிறது.

ஆனால் உயிரிழப்பு என்பது இந்தாண்டு இதுவரை 9 பேர் மட்டுமே. அதுவும், இருதய நோய் பாதிப்பு உள்ளவர்கள் மற்றும் இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள், மருத்துவமனைக்கு வராமல் வீட்டிலேயே இருந்தவர்கள்தான் இறந்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார் இந்நிகழ்வில் சோழிங்கநல்லூர் எம்எல்ஏ எஸ்.அரவிந்த் ரமேஷ், சோழிங்கநல்லூர், பெருங்குடி மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் தெ.பாஸ்கரபாண்டியன், மகேஸ்வரி ரவிக்குமார், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

# 2026ல் "திராவிட மாடல் 2.0 தொடங்கியது!" என்பதுதான் தலைப்புச்செய்தி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, அக்.29-

சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் தி.மு.க தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது.

இப்பயிற்சிக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசிய உரை பின்வருமாறு,

"நம் இயக்கம் எந்நாளும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பதற்கு அடித்தளமாக இருக்கும் உங்கள் மீது நம்பிக்கை வைத்து, "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முழக்கத்தை முன்னெடுத்திருக்கிறோம்.

உங்களுடைய உழைப்பினால், ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருக்குற நாம், அடுத்து ஏழாவது முறையாவும் ஆட்சி அமைக்க வேண்டும். அதற்குதான் இந்தப் பயிற்சிக் கூட்டம்.

எப்போதும் மக்கள் கூடவே இருந்து பணியாற்றும் உங்களுக்கு, தேர்விற்கு தயாராகிற மாணவர்கள், எல்லாவற்றையும் படித்த பிறகு, மீண்டும் ஒருமுறை revision செய்வதுபோல, நாம் செய்கிற revisionதான், இந்தப் பயிற்சிக் கூட்டம்.

2019ஆம் ஆண்டு முதல், நாம் எதிர்கொண்ட அனைத்து தேர்தல்களிலும், மகத்தான வெற்றிகளை பெற்று வருகிறோம். நம்முடைய வெற்றிகள், எதிரிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 2026 தேர்தலிலும் நாம்தான் வெற்றிபெற போறோம். அன்றைக்கு தலைப்புச் செய்தி, "திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடங்கியது!" என்பதுதான்.

2026ல் "திராவிட மாடல் 2.0 தொடங்கியது!" என்பதுதான் தலைப்புச்செய்தி! : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

இதை நான் ஆணவத்தில் சொல்லவில்லை. உங்கள் உழைப்பு மீதும், ஆட்சியின் சாதனைகள் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் வைத்திருக்கிற நம்பிக்கையில் சொல்கிறேன்.



நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும், கோடிக்கணக்கான மக்களுடைய உள்ளங்களிலும் இல்லங்களிலும் சென்று சேர்ந்திருக்கிறது.

லட்சக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்றத்தையும், தொழில்துறையில் மிகப்பெரிய பாய்ச்சலையும், கல்வித் துறையில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறோம். இதுதான் திராவிட மாடலின் அடையாளம். இந்தியாவில் எந்த மாநில அரசும் நம் அளவிற்கு சாதனைகள் செய்திருக்க மாட்டார்கள்.

ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டிற்கு செய்துவரும் துரோகங்களையும், நிதி ஒதுக்கீடுகளில் செய்யப்படும் வஞ்சகங்களையும் எடுத்துச் சொல்லி, 'தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்' என்ற முழக்கத்தை தமிழ்நாடு முழுவதும் உள்ள வீடுகளுக்கு சென்று பரப்பல் செய்து, இந்த மாபெரும் முன்னெடுப்பை வெற்றியடைய வைத்த கழகத்தின் இரத்த நாளங்களான உடன்பிறப்புகள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய பாராட்டுகள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் ஏற்படுத்திய சுயமரியாதை உணர்வால்தான், பா.ஜ.க.வின் பாசிச ஆட்சிக்கு அடிபணியாமல் முதுகெலும்போடு எதிர்த்து நிற்கிறோம். மக்களுக்கான உரிமைக்காக போராடி வாதாடி வெற்றிபெற்று வருகிறோம்.

இதையெல்லாம் பார்த்துதான், பா.ஜ.க.விற்கு நம் மீது கோபம் வருது. அதுனால்தான், பல்வேறு சூழ்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள்.

தி.மு.க இந்த மண்ணில் இருக்கும்வரை பா.ஜ.க.வின் பகல் கனவு பலிக்காது. வாக்குரிமையை பறிக்கும் SIR திட்டத்தை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும்.

2026ல் "திராவிட மாடல் 2.0 தொடங்கியது!" என்பதுதான் தலைப்புச்செய்தி! : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

அனைவரும் ஒருங்கிணைந்து 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்ற பரப்புரையை முன்னெடுக்க வேண்டும். மாநில நிர்வாகியாக இருந்தாலும்கூட, அவரவர் வாக்குச்சாவடியில் வெற்றி பெறுவது இலக்காக இருக்க வேண்டும். நானே கூட என்னுடைய வாக்குச்சாவடியில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்று, அங்கும் நம்முடைய வெற்றியை உறுதிசெய்வதற்கான பரப்புரையில் ஈடுபடுவேன்.

தி.மு.கழகத்தினரின் முகங்களில் நான் உதய சூரியனை பார்க்கிறேன். அதனைத் தமிழ்நாடு மக்களின் இதய சூரியனாக மாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் கழகத்தினருக்கு இருக்கிறது.

2021 தேர்தலில் தமிழ்நாட்டை கொத்தடிமை அதிமுக கூட்டத்திலிருந்து மீட்ட தேர்தல், 2026 தேர்தல் என்பது தமிழ்நாட்டை பாஜக அதிமுக கும்பலிடமிருந்து பாதுகாப்பதற்கான தேர்தல்.

2026ல் நடக்க இருக்கிற ஜனநாயகத் தேர்தல் தமிழ்நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கிற தேர்தல்; தனித்தன்மையோடு தலைநிமிர்ந்து நிற்கிற நம்முடைய ஆட்சியா? டெல்லிக்கு வளைந்து கொடுக்குற அடிமைகளின் ஆட்சியா? என்று தீர்மானிக்கிற தேர்தல்; தமிழ்நாட்டின் சுயமரியாதையையும், தனித்தன்மையையும் காப்பாற்றபோகிற தேர்தல்.

தமிழ்நாட்டை அழிக்க, இன எதிரிகளும் தமிழ்த் துரோகிகளும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வருகிறார்கள். இவர்களை வீழ்த்தி நம்முடைய மண் ஸ்ரீ மொழி ஸ்ரீ மானம் காக்க வேண்டும்.

தமிழ்நாடு இப்போது சமூக, அரசியல், பொருளாதார படையெடுப்பை சந்தித்து வருகிறது. தமிழ்நாட்டிற்கு அனைத்து வகையிலும் அநீதி இழைக்கப்படுகிறது. இந்தியின் பெயரால் சமஸ்கிருதத்தின் பெயரால் ஜி.எஸ்.டியின் பெயரால் புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு, சட்டங்கள், உத்தரவுகள், ஆளுநர் என தொல்லை மேல் தொல்லை கொடுக்கிறார்கள். இது தமிழ்நாடு மீது தொடுக்கப்படும் தாக்குதல். இந்த தாக்குதலை முறியடிக்கிற வல்லமை நமக்குதான் இருக்கிறது.

பெயரளவிற்கு திராவிட கட்சியாக இருந்த அதிமுகவை அமித்ஷாவிடம் விழுந்து அடகு வைத்துவிட்டார். அதனை அதிமுகவினரே விரும்பவில்லை. அந்த கூட்டணியை தமிழ்நாட்டு மக்களும் ஏற்கவில்லை. நம் கூட்டணி மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பயன்படுத்தி அனைத்து தொகுதிகளிலும் வெல்வோம்.

திராவிட மாடல் ஆட்சியில் வளப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டை கபளீகரம் செய்து நாசம் செய்ய திட்டமிடும் கூட்டத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தியாக வேண்டும்.


மக்கள் நலனையும், மாநில உரிமைகளையும் காக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தமிழ்நாடு தலைகுனியாது!"

## வடபழனி முருகன் கோயிலில் சூரசம்ஹாரம்: திருத்தணியில் சுப்பிரமணியருக்கு புஷ்பாஞ்சலி

சென்னை / திருத்தணி, அக்.29-

கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு வடபழனி முருகன் கோயிலில் சூரசம்ஹாரம் நேற்று நடந்தது. அரோகரா கோஷத்துடன் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். திருத்தணி சுப்பிரமணியர் கோயிலில் புஷ்பாஞ்சலி நடைபெற்றது. சென்னை வடபழனி முருகன் கோயிலில் மகா கந்த சஷ்டி விழா கடந்த 21ம் தேதி வரசித்தி விநாயகரின் மூஷிக வாகன புறப்பாட்டுடன் தொடங்கியது.

அக். 22ம் தேதி முதல் லட்சார்ச்சனை தொடங்கியது. தொடர்ந்து, தினசரி காலை, மாலையில் இரு வேளையும் பூஜைகள், சுவாமி வீதி உலாவும் நடந்தது. விழாவின் பிரதான நாளான நேற்று, உச்சி காலத்துடன் லட்சார்ச்சனை நிறைவு பெற்றது. அதனை தொடர்ந்து தீர்த்தவாரி உற்சவம் நடந்தது. மாலை 5.30 மணிக்கு அம்பாளிடம் வேல் பெற்று, சூரபத்மனை வதம் செய்ய முருகப் பெருமான் புறப்பட்டார்.



நேற்று இரவு சூரசம்ஹாரம் தொடங்கியது. முருகப் பெருமான் படை சூழ, யானை, சிங்கம், ஆடு உள்ளிட்ட ரூபங்களில் வந்த சூரபத்மனை வேலால் வதம் செய்யும் காட்சி அரங்கேறியது. இன்று வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் திருக்கல்யாண வைபவம் நடக்கிறது. திருமண நிகழ்வு முடிந்ததும் முருகப் பெருமானுக்கு மொய் எழுத பக்தர்கள் அழைக்கப்படுவர். மொய் எழுதும் தொகைக்கான ரசீது, பிரசாதங்கள் வழங்கப்படவுள்ளன. இரவு 8 மணிக்கு திருமண விருந்து அளிக்கப்படுகிறது.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், பெசன்ட் நகர் அறுபடைவீடு முருகன் கோயில், கந்தக்கோட்டம், மாடம்பாக்கம், தேனுபுரீஸ்வரர், குமரக்கோட்டம், குன்றத்தூர், சிறுவாபுரி, திருப்போரூர், வல்லக்கோட்டை உட்பட சென்னை மற்றும் புறநகரில் முருகன் கோயில்களில் கந்த சஷ்டி விழா நடைபெற்றது.

முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்கும் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெற்று வரும் கந்த சஷ்டி விழாவின் முக்கிய விழாவான புஷ்பாஞ்சலி நேற்று நடைபெற்றது. இதில், நேற்று அதிகாலை மூலவர் சுப்பிரமணிய சுவாமி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

தொடர்ந்து, நேற்று மாலை 4 மணியளவில், சுப்பிரமணிய சுவாமி கோயிலின் உப கோயிலான சுந்தர விநாயகர் கோயில் இருந்து, பல்வேறு மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட பல வகையான மலர்களை கோயில் ஊழியர்கள், பக்தர்கள் ஊர்வலமாக சரவணப் பொய்கை வழியாக சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு கொண்டு சென்றனர். பிறகு, மாலை 5 மணியளவில் காவடி மண்டபத்தில் உற்சவர் சண்முகருக்கு பல வகையான மலர்களால் புஷ்பாஞ்சலியும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

# இந்திய அரசு இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் கேந்திரா சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஒற்றுமை அணிவகுப்பு நிகழ்ச்சி

சிவகங்கை, அக்.29-

இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் எனது பாரதம் (நேருயுவகேந்திரா ) சிவகங்கை , அழகப்பா பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை , காளையார்கோவில் புனித மைக்கேல் கல்லூரி ஆகியவைகள் இணைந்து, சர்தார் வல்லபாய் படேல் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தக்கூடிய ஒற்றுமை அணிவகுப்பு நிகழ்ச்சி குறித்து, நேற்றைய தினம் (28.10.2025) காலை 11.00 மணியளவில் , சிவகங்கை மலைராம் ரெசிடென்சி கூட்டரங்கில் பி.வி. பிரவீன் குமார், மாவட்ட இளையோர் அலுவலர், எனது பாரதம் (நேருயுவகேந்திரா ) தலைமையில் நடைபெற்றது. இந்திய வரலாற்றில் இது போன்று ஒரு வரலாற்று சிறப்புமிக்க பிரச்சாரத்தின் தொடக்கத்தைப் பகிர்ந்து கொள்வதில் மிகவும் பெருமை கொள்வதாக தெரிவித்தார் . இது வெறும் பத்திரிகையாளர் சந்திப்பாக மட்டும் அல்லாமல் நம் நாட்டின் இதற்கு முன் மேற்கொள்ளப்படாத ஒரு பேரணியை அறிவிக்கும் தளமாகவும் அமைந்துள்ளது. இந்த பேரணி அடுத்த சில மாதங்களில் நாடு முழுவதும் நடைபெறும், இளைஞர்களிடையே ஒற்றுமை மற்றும் தேச பக்தியின் உணர்வை எழுப்புவதே இந்த பிரச்சாரத்தின் நோக்கம். இந்த பத்திரிகையாளர் சந்திப்பின் மூலம் சர்தார் வல்லபாய் படேலின் 150வது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், எங்கள் பிராந்தியத்தில் சர்தார்@150 அதிகாரப்பூர்வமாகத் தொடங்குகிறோம். ஒற்றுமை துண்டுதுண்டாக இருந்த இந்தியாவை ஒன்றினைத்து வலுவான பிரிக்கப்படாத தேசமாக வடிவமைத்த மனிதரை போற்றுவதில் நம் அனைவருக்கும் மிகுந்த பெருமைக்குரிய தருணம் இது. அணிவகுப்பை இந்தியாவின் இரும்பு மனிதர் என்று சர்தார் படேலை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அவரது உண்மையான பலம் அவரது மன உறுதி மட்டுமல்ல, “இந்தியா ஒன்று, இந்திய ஒன்றுபட்டது. இந்தியா என்றென்றும் ஒற்றுமையாக இருக்கும்“ என்ற அவரது உறுதியான நம்பிக்கையாகும். இதே நம்பிக்கையைதான் பிரதமர் நரேந்திர மோடி நேற்று 2047ம் ஆண்டுக்கான கூஷிவீளீ ஓவீமீ பாரதத்தின் இலக்கை அடைய முன்னெடுத்து வருகிறார்.

டாக்டர் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாஜி மைபாரத் இணையதளத்தில் அக்டோபர் 60 தேதி இதற்கான பிரச்சாரத்தை




தொடங்கிவைத்தார். சமூக ஊடக ரீல்ஸ் போட்டிகள், கட்டுரை எழுதும் போட்டிகள் மற்றும் சர்தார்@150 இளம்தலைவர்கள் திட்ட வினாடி வினா ஆகியவற்றில் இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்கின்றனர். இவை வெறும் போட்டிகள் அல்ல சர்தார் படேலின் கருத்துக்களை ஒவ்வொரு இதயத்திற்கும் பரப்புவதற்கான வழிகள். அனைத்து பதிவுகள், போட்டிகள் மற்றும் டிஜிட்டல் செயல்பாடுகள் My Bharat Portal நடத்தப்படும். இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்க ஒரே தளத்தை இது வழங்குகிறது. அடுத்த இரண்டு மாதங்களில், இந்தியாவின் சர்தார் படேலின் ஒற்றுமை பற்றிய செய்திகளை எங்கும் பேசுவார்கள் என்பதை இளைஞர்கள் அவர்களின் மொபைல் திரைகள் முதல் பொது மேடை வரை நீங்கள் காண்பீர்கள் இந்த தேசிய சக்தி மற்றும் பெருமை அலை அவருக்கு ஒரு உண்மையான ஒரு அஞ்சலியாக இருக்கும். இரண்டாம் கட்டம் எங்களுக்கு இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அக்டோபர் 31 முதல் நவம்பர் 25 வரை, எங்கள் பிராந்தியம் முழுவதிலுமிருந்து இளைஞர்களுடன் இணைந்து, நகரங்கள் கிராமங்களின் பாதயாத்திரைகளை நடத்த உள்ளோம். இந்த பேரணிகளில் யோகா மற்றும் சுகாதார முகாம்கள், சொற்பொழிவுகள், விவாதங்கள் மற்றும் போதைப் பொருள் இல்லாத இந்தியாவிற்கான உறுதிமொழிகள் ஆகியவை அடங்கும். இந்த பிரச்சாரத்தின் மற்றும் இந்த ஊர்வலங்கள் நமது தெருக்களில் நகரும்போது, அவை கூட்டு விழிப்புணர்வு இயக்கமாக மாறும். சமஸ்தானங்களை ஒன்றினைத்தது போல. இந்த பாதயாத்திரைகள் நமது மக்களின் இதயங்களை ஒன்றிணைக்கும். சர்தார் படேல் இந்தியாவின் நமது உள்ளூர் கலாச்சாரம் பன்முகத்தன்மை ஏக் பாரதம், ஸ்ரேஷ்டபாரதம் ஆகியவற்றின் பிரதிபலிப்பாகக் கொண்டடும் ஒரு மினியேச்சர் இந்தியா ஒன்றாக நடப்பதை நீங்கள் காண்பீர்கள். பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்த உள்ளோம். பாதயாத்திரை பாதைகளில், மோடி அரசின் நலத்திட்டங்கள். தூய்மை கண்காட்சிகள் காட்சிப்படுத்தப்படும். மேலும் மைபாரத் தன்னார்வலர்கள், என்சிசி மற்றும் என்எஸ்எஸ் இளைஞர்கள் எங்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

நமது மாவட்டங்களில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் தங்கள் நிறுவனங்களை பதாகைகளை ஏந்தியவாறு தேர்தெடுக்கப்பட்ட இடத்தில் பாதயாத்திரைகளில் 810 கி.மீ தூரம் நடப்பார்கள். இளைஞர்கள் முதல் பெரியவர்கள் ஓய்வுபெற்ற அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பிரபலமான குடிமக்கள் வரை சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் இதில் பங்கேற்பார்கள்.

மற்றும் மக்களை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். சர்தார் படேலின் வாழ்க்கை குறித்த போட்டிகள் மற்றும் அறிஞர்கள் ஆராய்ச்சியாளர்களின் சொற்பொழிவுகள் இடம் பெறும். ஊக்குவிக்கும் வகையில் அவரது கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தெரு நாடகங்கள், மால்கள், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில்நிகழ்த்தப்படும். தீபாவளி கொண்டாட்டங்கள் அக்டோபர் 20ஆம் தேதி நிறைவடையும் நிலையில், இந்த பிரச்சாரம் நாடு முழுவதும் ஒரு பண்டிகை உணர்வை மீண்டும் தூண்டும். பிரதமரின் தொலைநோக்குப் பார்வையான 1 லட்சம் இளம் தலைவர்களை தேசத்திற்கு உத்வேகம் அளிக்கும் பணியை உள்ளடக்கிய நாடாளுமன்றத் தொகுதியின் உள்ளூர் பகுதிகளைச் சேர்ந்த இளம் சாதனையாளர்களையும் அழைக்க உள்ளோம்.

பிரதமரின் ஒரு லட்சம் இளம் தலைவர்களின் கனவை நனவாக்கும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களை அங்கீகரித்து இயக்கத்திற்குள் கொண்டு வருவோம். உள்ளூர் தன்னார்வ அமைப்புகள், பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரிகள் இணைந்து சமூக நிகழ்வுகளையும், கலாச்சாரம் மற்றும் சமூகத்தைக் கொண்டாடும் மூன்று நாள் ஒற்றுமை திருவிழாவையும் 810கி.மீ பாதயாத்திரைப் பாதையில் ஏற்பாடு செய்வார்கள்.

இந்தப் பிரசாரத்தின் மிக முக்கியமான அத்தியாயம் நவம்பர் 26 ஆம் தேதி அரசியலமைப்பு தினத்தன்று தொடங்குகிறது. அன்று, நமது பிராந்தியத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரண்டு பாதயாத்திரிகள் சர்தார் படேலின் பிறந்த இடமான கரம்சாத்திலிருந்து கெவாடியாவில் உள்ள ஒற்றுமை சிலை வரை 152கி.மீ தேசிய பேரணியில் இணைவார்கள். இந்தியா முழுவதிலும் இருந்து பங்கேற்பாளர்கள் நடந்து செல்வார்கள்.

இந்தியாவின் சுதந்திரம் தன்னம்பிக்கை மூலம் அடையப்பட்டது என்பதை இந்தப் பயணம் நமக்கு நினைவூட்டுகிறது. சர்தார் படேலின் தொலைநோக்குப் பார்வையைப் பின்பற்றுவதன் மூலம், பிரதமர் மோடியால் முன்னெடுக்கப்பட்ட “உள்ளூர் மக்களுக்கான குரல்” மற்றும் ஆத்ம நிர்பர் பாரத் ஆகியவற்றின் உணர்வை நாம் முன்னேடுத்துச் செல்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். சர்தார் படேல் பிரதேசங்களை ஒன்றிணைத்தார். நாம் கனவுகளை ஒன்றிணைக்க வேண்டும். அவர் இந்தியாவை வரைபடத்தில் ஒருங்கிணைத்தார். நம் இதயங்களிலும் ஆன்மாக்களிலும் இந்தியாவை ஒருங்கிணைக்க வேண்டும். இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் நமது தோள்களில் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைத்துள்ளது. மேலும் பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் அதை நாம் நிறைவேற்ற வேண்டும். இன்று நாம் சர்தார் படேலை நினைவுகூர்வது போல, அவரது கனவு அவரது காலத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அது நமக்கு வரவிருக்கும் தலைமுறைகளுக்கு ஒரு கனவாக இருந்தது. Akhand Bharat என்ற கனவை Viksit மற்றும் Atma Nirbhar Bharat ஆக மாற்றுவது நமது கடமை. நமது புனிதமான பொறுப்பு.

நமது பிராந்தியத்தில் நடைபெறும் ஒற்றுமை அணிவகுப்பை செய்தி சேகரிக்கவும், அதன் உணர்வு மற்றும் நோக்கத்தை முன்னிலைப் படுத்தவும், ஒற்றுமை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் இந்த செய்தியை சமூகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டு செல்ல உதவுமாறு அனைத்து ஊடக உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறினார்..

## குரோம்பேட்டை திருக்குறள் பேரவை சார்பில் ஆசிரியர் தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது

தாம்பரம், அக்.29-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் குரோம்பேட்டை திருக்குறள் பேரவை சார்பில் கிழக்கு தாம்பரத்தில் உள்ள ஜெயகோபால் கரோடியா தேசிய மேல்நிலை பள்ளியில் ஆசிரியர் தின விழா திருக்குறள் பேரவை தலைவர் டாக்டர் புலவர் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது இந்த விழாவில் திருக்குறள் பேரவை நிறுவனத்தலைவர் தெ.பொ.இளங்கோவன் தலைமை உரையாற்றினார். ஆசிரியர் தின விழாவில் திருக்குறள் பேரவை இணைச்செயலாளர் முனைவர் ம.அல்போன்ஸ் எழுதிய திருவள்ளுவர் திருவுலா என்ற நூல் வெளியிட்டு நடைபெற்றது இந்த நூலை தமிழ்நாடு பாரத சாரண சாரணியம் முதன்மை ஆணையர் மற்றும் மேனாள் தமிழ்நாடு பள்ளி கல்வி இயக்குனர் முனைவர் க.அறிவொளி வெளியிட உலக தமிழ் சங்கம் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் பெற்று கொண்டார் பின்னர் ஜெயகோபால் கரோடியா தேசிய மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் ந.தாமரை கண்ணன் நூல் அறிமுக உரை ஆற்றினார் இந்த விழாவில் சிறப்பாக பணியாற்றும் ஆசிரிய பெரு மக்களுக்கும் அரசு தேர்வுகளில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் அரசு தொழிற்பயிற்சியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கும் திருக்குறள் முற்றோதல் நிகழ்த்திய மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது. இதில் டாக்டர் ஜமுனா, எஸ்.வேதாந்தம், டாக்டர் சுதா சேஷய்யன், முனைவர் கிரிஜா சேஷாத்திரி மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், திருக்குறள் பேரவை நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

குறிப்பாக கடந்த ஆறு மாதங்களாக மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பான முறையில் பணியாற்றிய கருணை இல்லம் வெல்போர் டிரஸ்ட் இயக்குனர் அமுதா சந்திரன் அவர்களுக்கு சால்வை அணிவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது உடன் இளம் வழக்கறிஞர் நிஷா, கருணை இல்லம் வெல்போர் டிரஸ்ட் நிறுவனர் தாமோதரன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்








■ மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பூச்சம்பட்டி, ராமையன்பட்டி ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் தாசில்தார்கள் ராமச்சந்திரன்,பார்த்திபன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணவேணி,பொற்செல்வி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்மலா,ஊராட்சி செயலாளர் மகாராஜன்,சுந்தரி ஆகியோர் பங்கேற்று பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மனு அளித்தனர்.



## பழனியில் சூரர்களை வதம் செய்து வெற்றிவாகை சூடிய முருகனுக்கு வள்ளி தெய்வானையை மணமுடித்து வைக்கும் முக்கிய நிகழ்வான திருக்கல்யாணம் நிகழ்ச்சி நடைபெற்றது

பழனி, அக்.29-

அறுபடை வீடுகளில் மூன்றாம்படைவீடான பழனியில் கந்தசஷ்டி திருவிழா கடந்த 22ம் தேதி காப்புகட்டுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. கந்தசஷ்டியின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் நேற்று மாலை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அசுரர்களை அழித்த போரில் வெற்றிபெற்ற சண்முகருக்கு தெய்வானையை மணமுடித்து வைக்கும் முக்கிய நிகழ்வான திருக்கல் யாணம் நிகழ்ச்சி நடைபெற்றது. மலைக் கோவில் மேற்பிர காரத்தில் உள்ள மண்டபத்தில் அருள்மிகு சண்முகர் வள்ளி, தெய்வானை திருக்கல் யாணம் நடைபெற்றது. முன்னதாக அருள்மிகு சண்முகர் வள்ளி, தெய்வானைக்கு பால், தேன்,பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பதினாறு வகையான அபிஷேக பொருட்களால் சிறப்பு அபிசேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து தீபாராதனை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு முருகனை தரிசனம் செய்தனர். தொடர்ந்து பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் திருமண விருந்து வழங்கப்பட்டது.

## கபடி வீராங்கனை கார்த்திகாவுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு

மீனம்பாக்கம், அக்.29-

பஹ்ரைன் நாட்டில் கடந்த 19ஆம் தேதி தொடங்கி 23ஆம் தேதி வரை ஆசிய இளையோருக்கான விளையாடு போட்டிகள் நடைபெற்றது. இதில் 19 வகையான விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. மொத்தமாக இதில் 45 நாடுகளைச் சேர்ந்த வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டு விளையாடினர்.

மேலும் 18 வயது உட்பட்டோர்க்கான இந்த ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்த ஆண்டு கபடி போட்டியும் சேர்க்கப்பட்டு நடத்தப்பட்டது. இதில் இளையோருக்கான ஆசிய கபடி போட்டியில் ஆடவர்கள் பிரிவில் 14 அணிகளும் மகளிர் பிரிவில் 10 அணிகளும் பங்கேற்று விளையாடின.

இதில் ஆடவர் கபடி இறுதி போட்டியில் இந்திய அணி 3532 என ஈரான் நாட்டை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது, அதேபோல் மகளிர் பிரிவில் இந்திய அணி 7521 என ஈரான் நாட்டை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தனர்.

இதில் குறிப்பாக சென்னை கண்ணகி நகர் பகுதியைச் சேர்ந்த கார்த்திகா என்பவர் இந்திய மகளிர் அணி கபடி போட்டியில் தங்கப்பதக்கம் வெல்ல உறுதுணையாக இருந்தார், அதேபோல் ஆடவர் அணியில் மன்னார்குடி அடுத்த வடுவூர் பகுதியைச் சேர்ந்த அபினேஷ் என்பவரும் இந்திய அணி தங்க பதக்கம் வெல்ல உறுதுணையாக இருந்தார்.

இதில் குறிப்பாக இந்திய மகளிர் அணியில் சென்னை கண்ணகி நகரை சேர்ந்த கார்த்திகா நன்றாக கபடி விளையாடும் வீடியோவை சமூக வலைதளங்களில் பதிவிட்டு பலர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

மேலும் 9 ஆண்டுகள் கழித்து இந்திய மகளிர் கபடி அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரங்கனை தேர்வாகி அணி தங்கப்பதக்கம் வெல்ல உதவியாக இருந்ததால் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினும் கார்த்திகாவுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்த நிலையில் தங்கப் பதக்கம் வென்று





வீராங்கனை கார்த்திகாவும் கபடி வீரர் அபினேஷும் விமான மூலம் சென்னை திரும்பினர் இவர்களுக்கு சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக மிகப்பெரிய உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேலும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, செங்கல்பட்டு மாவட்டம் கபடி கழக சார்பில் வேல்முருகன் மற்றும் பிற அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து பாஜக மாநில பட்டியல் அணி செயலாளரும் ஒருங்கிணைந்த மனிதநேய அம்பேத்கர் கூட்டமைப்பின் நிறுவனர் தலைவர் நெடுங்குன்றம் ஆர்.கே. சூர்யா தங்கப் பதக்கம் வென்ற கார்த்திகாவுக்கு உதவித்தொகை வழங்கி பூங்கொத்து கொடுத்து அம்பேத்கர் சிலையை வழங்கினார்.

இதனை அடுத்து இருவரும் தமிழ்நாடு முதலமைச்சரை சந்திப்பதற்காக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக அரசு வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.



■ வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, உள்ளி ஊராட்சியில், வேலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு, மத்திய மாநில அரசின் சாதனை விளக்கப் புகைப்பட கண்காட்சியினை ஊராட்சி மன்ற தலைவர் ஜெய்சங்கர் முன்னிலையில் ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். இந்நிகழ்வின்போது துணைதலைவர் சதிஷ், ஊராட்சி செயலாளர் சுரேஷ்பாபு மற்றும் வார்டு உறுப்பினர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.





# மாநிலப் போட்டிக்கு தேர்வாக சிவகங்கையில் கலைத் திருவிழா போட்டிகள்



சிவகங்கை, அக்.29-

சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டியானது மூன்றாம் நாளாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு சிறப்பாக நடைபெற்றது. போட்டிகளை முதன்மைக் கல்வி அலுவலர் மாரிமுத்து தலைமை ஏற்று தொடங்கி வைத்தார். ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி துறை மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ மாவட்டக் கல்வி அலுவலர்கள் இராஜேந்திரன் செந்தில்குமரன் வடிவேல் முன்னிலை வகித்தனர். சிவகங்கை புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் களிமண் சுதை வேலைப்பாடு மணற்சிற்பம் ரங்கோலி ஆகிய போட்டிகளும் மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் கிராமிய நடனம் (குழு) நபார்டு கட்டிடம் முதல் தளத்தில் செவ்வியல் இசை (தனிப்பாட்டு) நாட்டுப்புறப் பாடல் (தனி பாட்டு) வில்லுப்பாட்டு (குழு) நூலக கட்டிடத்தில் பலகுரல் பேச்சு மாவட்ட திட்ட அலுவலக முதல் தளத்தில் கிராமிய நடனம் (தனி) கூட்டரங்கில் பரதநாட்டியம் (குழு) இசை வட்டாரவள மையத்தின் பரதநாட்டியம் (தனி) ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தனிநபர் நடிப்பு பாவனை நடிப்பு (தனிபாட்டு) ஆகிய போட்டிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு தனி தனியாக நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இன்று 29.10.2024 அன்று புதன்கிழமை கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் தலைமையில் சான்றிதழ்கள் வழங்கப்பட இருக்கின்றன. மாணவ மாணவிகள் தங்களிடம் காணப்படும் அனைத்து திறன்களையும் வெளிக்கொணர்ந்து கலை ஆர்வத்தோடு தங்களின் தனிதிறன்களை வெளிப்படுத்தி மகிழ்ந்தனர். மாவட்ட அளவில் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ மற்றும் தலைமை ஆசிரியர்கள் வட்டாரக் கல்வி அலுவலர்கள் வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக செயல்பட்டனர்.



# வேலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் குழந்தைகள் நலன் தொடர்பான கூர் ஆய்வு கூட்டம்

## தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் புதுக்கோட்டை விஜயா பங்கேற்பு

வேலூர், அக்.29-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் தொடர்பான கூர் ஆய்வு கூட்டம், வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் புதுக்கோட்டை விஜயா, தலைமையில் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் குழந்தைகள் நலன் தொடர்பான கூராய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்கள் டாக்டர்.மோ.கசிமீர் ராஜ், டாக்டர்.மோனா மட்டில்டா பாஸ்கர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (பொ) சி.செல்வி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாநகராட்சி மரீண்டலம் 4 வார்டு எண்.49 கீழ பெருமாள் மேஸ்திரி வீதி நெல்பேட்டை பகுதியில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பொது கழிப்பறையை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். அருகில் துணை மேயர் தி.நாகராஜன் , மாமன்ற உறுப்பினர் செய்யது அபுதாகீர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கிராம மக்கள் மத்தியில் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் கணக்கனேந்தல் கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்காத அதிகாரிகளால் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் கிராம மக்கள்

ஆர் எஸ் மங்கலம், அக்.29-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே திருத்தேர்வளை ஊராட்சி கணக்கனேந்தால் கிராமத்தில் பல மாதங்களாக அன்றாட பயன்பாட்டிற்கு கூட தண்ணீர் இல்லாமல் தவிக்கும் கிராம மக்கள் பல முறை அதிகாரிகளிடம் கூறியும் இன்றுவரை எந்த பயனும் இல்லை என்பதால் ஆனந்தூர்,ஆர் எஸ் மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் வாடகைக்கு வீடு தேடி வருவதாக கிராம மக்கள் வேதனை .

இது குறித்து கிராம மக்கள் கூறுகையில் ,

பல ஆண்டுகளாக எங்களது பகுதியில் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட குடிநீர் தடை செய்யப்பட்ட நிலையில் தற்போது ஒன்பது மாதங்களுக்கு மேலாக அன்றாட பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட குழாய் நீர் விநியோகம் தடைப்பட்டு உள்ளது.



ஏற்கனவே பல ஆண்டுகளாக குடிநீர் குடம் ஒன்றுக்கு ரூ .13முதல்15 க்கு காசு கொடுத்து வாங்கி பயன்படுத்தி கொண்டு இருக்கும் நிலையில் தற்போது ஒன்பது மாதங்களுக்கு மேலாக அன்றாட பயன்பாட்டிற்கும் குழாய் நீர் இல்லாததால் கூடுதலாக அடிப்படை தேவைகளுக்கு காசு கொடுத்து தண்ணீர் வாங்கி பயன்படுத்தி வருகிறோம் இதனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் மிகுந்த சிரமம் அடைந்து வருவது மட்டுமின்றி கிராம மக்களின் வாழ்வாதாரமும் இழந்து தவிக்கின்றோம் இது குறித்து கிராம சபை கூட்டம் மற்றும் ஊராட்சி நிர்வாகம் முதல் வட்டார வளர்ச்சி அலுவலர் வரை பல முறை கூறியும் அதிகாரிகள் மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் அலட்சிய போக்கில் செயல்படுவதால் அரசுக்கு கிராம மக்கள் மத்தியில் அவப்பெயரை உண்டாக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன எனவே கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு நாள்தோறும் அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி கொண்டு வருகின்ற நிலையில் . இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்ற நாள் முதல் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் அடிப்படை வசதிகள் குறித்த கோரிக்கைகளுக்கு ஏற்ப அதனை உடனடியாக தீர்வு காணும் வகையில் சீராக பணியாற்றி வருகின்ற மாவட்ட ஆட்சியரும் துறை சார்ந்த அமைச்சரும் சொந்த ஊரில் தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி வாழ்வாதாரத்தை இழந்து உயிர் வாழ வழி தேடி ஆனந்தூர் ,ஆர் எஸ் மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் வாடகைக்கு வீடு தேடி அலையும் கிராம மக்களின் சிரமத்தை போக்கி வாழ்வாதாரத்தை காக்க கணக்கனேந்தல் கிராமத்திற்கு போர்க்கால அடிப்படையில் அன்றாட பயன்பாட்டிற்கு தண்ணீர் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

காத்து இருந்து பார்ப்போம் கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை காக்க அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் கணக்கனேந்தல் கிராமத்திற்கு போர்க்கால அடிப்படையில் தண்ணீர் வழங்குமா ???

# தென்காசி மாவட்டம் நெட்டூர் வட்டாரம் ஊத்துமலையில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம்

தென்காசி, அக்.29-

தென்காசி மாவட்டம் நெட்டூர் வட்டாரம் ஊத்துமலை ஆர்.சி. நடுநிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் (01.11.2025) அன்று நடைபெற உள்ளது மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், இ.ஆ.ப தகவல்.

தென்காசி மாவட்டம் நெட்டூர் வட்டாரம் ஊத்துமலை ஆர்.சி. நடுநிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 01.11.2025 (சனிக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல், தோல்,, பல், கண், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் முகாமிற்கு வருகை தந்து மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், இ.ஆ.ப தெரிவித்துள்ளார்.

# உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 01.11.2025 அன்று கிராம சபைக் கூட்டம் நடைபெற உள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, அக்.29-

தேனி மாவட்டத்தில் உள்ள 130 கிராம ஊராட்சிகளிலும் 01.11.2025 உள்ளாட்சிகள் தினத்தன்று முற்பகல் 11.00 மணியளவில் கிராம சபைக் கூட்டம் கிராம ஊராட்சியின் தனி அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)ஆல் நடத்தப்படவுள்ளது.

கிராம சபைக் கூட்டத்தை 130 கிராம ஊராட்சிகளிலும் மிகச் சிறப்பாகவும், பொதுமக்கள் ஆர்வத்துடனும் கலந்து கொள்ளும் வகையிலும், நடத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் 01.11.2025 சனிக்கிழமை அன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

# நெல் வயல்களில் வால் நெல் கட்டுப்பாடு

கன்னியாகுமரி, அக்.29-

நேரடி நெல் விதைப்பு வயல்களில் வால் நெல் கட்டுப்பாடு முறைகள் குறித்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 11,200 ஹெக்டர் பரப்பில் கன்னிப்பூ, கும்பப்பூ என இரு பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெல் வயல்களை சுத்தமாக பராமரிக்காத சூழலில் பிற வகை செடிகள் மற்றும் களைகள் அதிக அளவில் வளரும். நெல் வயல்களில் குறிப்பாக நேரடியாக விதைக்கப்படும் நெல் வயல்களில் நெற்பயிர் பூக்கும் போது வால்நெல் (ஊரை) எனப்படும் களையும் நெல்லுக்கு முன்னாதாகவே பூத்து கதிராகி வயல்களிலே உதிர்ந்து விடும். மீண்டும் அடுத்த பருவத்திலும் முளைத்து பயிராகி பெரும் மகசூல் இழப்பை ஏற்படுத்தும்.



வால்நெல்



வால்நெல்

நெல் வயல்களில் வால் நெல் பாதிப்பிற்கு நிரந்திர தீர்வு காண 26.09.2025 அன்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுடன் வேளாண்மை துறை அதிகாரிகள் சேர்ந்து கள ஆய்வு மேற்கொண்டதில் நிபுணர் குழுவினால் பின்வரும் பரிந்துரைகள் வால் நெல் பாதிப்பினை கட்டுப்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சான்று விதைகளை பயன்படுத்த வேண்டும். சேற்றுழவு செய்து மெல்லிய படலமாக தண்ணீர் கட்டுவதால் களை நெல் முளைப்புத்திறன் கட்டுப்படுத்தப்படும். நெல் பூக்கும் பருவத்தில் களை நெல்லின் கதிர்களை களை எடுத்து கட்டுப்படுத்தலாம். பயறுவகை பயிர்களை பயிர் சுழற்சி முறையில் பயிரிடும் போது களை நெல் பாதிப்பு முழுமையாக கட்டுப்படுத்தப்படும். பசுந்தாள் உரமான தக்கைப்பூண்டினை விதைத்து பூக்கும் பருவத்தில் மடக்கி உழும் போது களை நெல் விதைகள் அழிக்கப்படுவதுடன் மண்ணின் வளமும் மேம்படுத்தப்படும். வயலினை மேலோட்டமாக உழுவது மூலம் முளைத்த களைகளை அழிக்கலாம். வயலில் தண்ணீர் கட்டி களை விதைகளை முளைக்க செய்து பின்பு உழுதல். இந்த செயல்முறையை களை நெல் பாதிப்பினை பொறுத்து ஒன்று அல்லது இரண்டு முறை செய்வதன் மூலம் மண்ணில் உள்ள களை நெல் விதைகளை அழிக்கலாம். விதைப்பிற்கு 3 நாட்களுக்கு முன் மண் மறையுமாறு சிறிய அளவு நீர் நிறுத்தி ஆக்சிபுளுரோபென் களைகொல்லியினை ஏக்கருக்கு 80 கிராம் அளவில் 20 கிலோ உலர்ந்த மணலுடன் கலந்து தூவ வேண்டும். விதைப்பிற்கு உருளை விதைப்பான் பயன்படுத்தலாம். விதைத்த 2530 மற்றும் 45 50 நாட்களில் கைக்களை எடுக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

# படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களிடமிருந்து உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்

கடலூர், அக்.29-

கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் 01.10.2025 உடன் தொடங்கும் காலாண்டிற்கு படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களிடமிருந்து, வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

பத்தாம் வகுப்பு (தோல்வி), பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் அதற்கும் மேலான கல்வித்தகுதிகளை பெற்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, பதிவினைத் தொடர்ந்து புதுப்பித்து 30.09.2025 அன்றைய நிலையில் ஐந்தாண்டுகளுக்கு மேலாக வேலைவாய்ப்பின்றி காத்திருக்கும் இளைஞர்களுக்கு, தமிழக அரசால் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளை பொறுத்தமட்டில், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டு முடித்திருந்தால் போதுமானது.

பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், விவசாயம், சட்டம், B.Sc., Nursing போன்ற தொழிற்பட்டப் படிப்புகள் (PROFESSIONAL DEGREE) முடித்தவர்கள் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற முடியாது.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற மனுதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இந்த உதவித் தொகையினைப் பெறுவதற்கு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மனுதாரர்கள் 30.09.2025 அன்றைய நிலையில் 45 வயதிற்குள்ளும், இதர இனத்தை சார்ந்தவர்கள் 40 வயதிற்குள்ளும் இருத்தல் வேண்டும்.

உதவித்தொகை விண்ணப்பப் படிவம் பெற விரும்பும் மனுதாரர்கள், தங்களின் வேலைவாய்ப்பு அடையாள அட்டையினை ஆதாரமாக காண்பித்து, கடலூர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் விண்ணப்பங்களை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற்றவராகவோ அல்லது பெறுபவராகவோ இருந்தால் விண்ணப்பிக்க வேண்டாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, மனுதாரர்கள் தேதி வரை அனைத்து அலுவலக வேலை நாட்களிலும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்டப்பிரிவில், அனைத்து அசல் கல்விசான்றிதழ்கள், வேலைவாய்ப்பு அடையாள அட்டை மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகம் மற்றும் ஆதார் அட்டையுடன் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

மாலை தந்தி

புதன்கிழமை 29.10.2025



## மாமன்னர் மருதுபாண்டியர் நினைவிடத்தில் நகர்மன்ற துணைத்தலைவர் வழக்கறிஞர் ம. கார்கண்ணன் தலைமையில் திமுகவினர் பங்கேற்பு

காளையார் கோவில், அக்.29-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் காளீஸ்வரர் ஆலயம் முன்பாக அமையப்பெற்றுள்ள மாமன்னர் மருது சகோதரர்களின் நினைவிடத்தில், அவர்களது 224 வது நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 24 அன்று திருப்புத்தூர் நினைவிடத்தில் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் அஞ்சலி செலுத்துகின்ற அரசு விழாவாகவும் , 27 ந்தேதி காளையார் கோவிலில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்ச்சியாக நினைவேந்தல் நிகழ்ச்சியும் நடைபெறுவது வழக்கம்.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், சமுதாய இயக்கத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதனிடையே சிவகங்கை நகர்மன்றத் துணைத்தலைவரும், சிவகங்கை மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ம.கார்கண்ணன் தலைமையில் சிவகங்கை திமுக வினர் கலந்து கொண்டு வணங்கினர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திமுக பிரதிநிதி வீரகாளை, நகர்மன்ற உறுப்பினர் துபாய் மு. காந்தி, மாவட்ட அமைப்பாளர் சிங்கமுத்து, நகர் சுற்றுசூழல் அணி அமைப்பாளர், நகர்மன்ற மேனாள் உறுப்பினர் சுப. ஜெயக்குமார், நகர்க்கழக திமுக நெசவாளரணி அமைப்பாளர், நகர்மன்ற மேனாள் உறுப்பினர் நாகநாதர் ம. நாச்சியப்பன், நகர் சௌந்திரராஜன், அண் ணாத்துரை , உள்ளிட்ட நிர்வாகிகள் மருது சகோத ரர்கள் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




## உலக அளவில் புகழ்பெற்ற மிகப் பழமை வாய்ந்த வேலூர் ஊரிசு கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

### முன்னாள் மாணவர் சங்கத் தலைவர். வி ஐ டி தலைவர் ஜி விஸ்வநாதன் பங்கேற்று சிறப்புரை

வேலூர், அக்.29-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அண்ணா சாலை, உலக அளவில் புகழ்பெற்ற மிகப் பழமை வாய்ந்த வேலூர் ஊரீஸ் கல்லூரி, காபு அரங்கத்தில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தின் தலைவரும், முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவருமான டாக்டர். ஜி. விஸ்வநாதன் தலைமையிலும், ஊரீசு கல்லூரியின் தலைவர் மற்றும் செயலர் வேலூர் பேராயத்தின் பேராயர் ஹென்றி சர்மா நித்தியானந்தம் முன்னிலையிலும் சிறபபாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் ஆர்.வேலு ஐ.ஏ.எஸ். (ஓய்வு, முன்னாள் மத்திய இணை அமைச்சர், ரயில்வே), டாக்டர். ஜி.சுந்தரம் ஐ.ஏ.எஸ் (ஓய்வு, முன்னாள் செயலாளர், இந்திய அரசு), ரகுபதி ஐ.ஏ.எஸ் (ஓய்வு), டி. கே.இராஜேந்திரன், ஐ.பி.எஸ். (ஓய்வு), டிஜிபி தமிழ்நாடு காவல்துறை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்தநிகழ்வில் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) டாக்டர் ஜே. ஆனிகமலா புளோரன்ஸ், கல்லூரியின் நிதி ஆளுநர் டாக்டர் எஸ். காலேப் நோபுள் சந்தர், முன்னாள் கல்லூ ரியின் முதல்வர்கள் மற்றும் முன்னாள், இந்நாள் பேராசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் சுமார் நாநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் முன்னாள் மாணவர் சங்கத்தின் அலுவலர் டாக்டர். எம்.ஜோசப். கோபிநாத் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.



## நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் லஞ்ச ஒழிப்பு பற்றி விழிப்புணர்வு நிகழ்வு

காரைக்குடி, அக்.29-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா, கோவிலூரில் உள்ள நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்ட திட்டம் சார்பாக நேற்று லஞ்ச ஒழிப்பு வாரம் கடைபிடிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் உதவிப்பேரசிரியர் முனைவர் பா. திருக்குமரன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் க. கலா விஜிலென்ஸ் பற்றி எடுத்துரைத்து, மாணவர்கள் எவ்வாறு விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்று கூறி, லஞ்சம் கொடுப்பதும் குற்றம் லஞ்சம் வாங்குவது குற்றம் என அறிவுறுத்தி உறுதிமொழி எடுத்தார். அதைத் தொடர்ந்து மாணவர்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் உதவிப் பேராசிரியர் அ.நிஜந்தன் நன்றியுரை வழங்கினார்.

## உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழகம் அமெரிக்க அப்ஸ்டேட் மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் பல்வேறு ஆராய்ச்சிகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம்

வேலூர், அக்.29-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழகம், அமெரிக்காவின் நியூயார்க் அருகே சிராகியூஸில் உள்ள அரசு பொது பல்கலைக்கழகமான நியூயார்க் மாநில பல்கலைக் கழகத்தின் (ஷிஹிழிசீ) ஒன்றாக விளங்கும் அப்ஸ்டேட் மருத்துவப் பல்கலைக் கழகத்துடன், வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.



இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஹெல்த் சயின்ஸ், பயோ மெடிக்கல் என்ஜினீயரிங் மற்றும் பன்முக துறை சார்ந்த மருத்துவ ஒத்துழைப்பு ஆகியவைகளில் இணைந்து செயல்படும் என தெரிவிக்கின்றனர். அமெரிக்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் அப்ஸ்டேட் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவர் டேவிட் சி. ஆம்பெர்க் மற்றும் வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர் சேகர் விசுவநாதன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் மேம்பட்ட கூட்டு ஆராய்ச்சி, ஆசிரியர் மாணவர் பரிமாற்றம், வளர்ந்து வரும் பயோ மெடிக்கல் துறை மற்றும் டிரான்ஸ்லேசனல் ஹெல்த்கேர் எனப்படும் பன்முக துறைசார்ந்த மருத்துவ ஒத்துழைப்பு ஆகியவைகளில் இணைந்து செயல்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த ஒப்பந்தம் மூலம் மருத்துவ பொறியியல் மற்றும் மருத்துவ தொழில்நுட்பங்களில் உலகளாவிய கூட்டு முயற்சிக்கு வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தின் மருத்துவ அறிவியல் மற்றும் பொறியியல் துறைக்கு முக்கிய அம்சமாக கருதப்படுவதாகவும். மேலும், கூட்டு ஆராய்ச்சி, முனைவர் பட்ட ஆலோசனை, மற்றும் அப்ஸ்டேட் மருத்துவ பல்கலைக்கழகத்தில் பயிற்சி வாய்ப்பு ஆகியவை மாணவர்களுக்கு கிடைக்குமெனவும். இதுகுறித்து, விஐடி பல்கலைக்கழகத்தின் மருத்துவ அறிவியல் மற்றும் பொறியியல் துறை டீன் கீதா மணிவாசகம் பேசும்போது, “““அப்ஸ்டேட் மருத்துவ பல்கலைக்கழகத்துடனான இந்த ஒத்துழைப்பானது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயோ மெடிக்கல் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பில் ஈடுபடுவதற்கு புதிய வழிகளை ஏற்படுத்தி தந்துள்ளது. இது வருங்கால மருத்துவ தொழில்நுட்பத்துக்கு, திறன் வாய்ந்த ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் முயற்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது” என்றார்.

நிகழ்வில் அப்ஸ்டேட் மருத்துவ பல்கலைக் கழகத்தின் மருத்துவ டீன் லாரன்ஸ் சின், ஆராய்ச்சி நிர்வாகத்தின் உதவித் துணைத் தலைவர் கிறிஸ்டோபர் நெவில், பட்ட படிப்புகளுக்கான டீன் மார்க் ஸ்மிட், பட்ட படிப்புகளுக்கான மருத்துவக் கல்வி உதவி டீன் ஸ்ரீராம் நர்சிபூர் மற்றும் விஐடி மருத்துவ அறிவியல் மற்றும் பொறியியல் துறை டீன் கீதா மணிவாசகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் மாமன்னர்கள் மருதுபாண்டியர்களின் 224வது குருபூஜையை முன்னிட்டு சிவகங்கை மேற்கு மாவட்டம் மருது சேனை சார்பாக மாவட்ட செயலாளர் சங்கங்குளம் பாலா தலைமையில் மாநில துணைச் செயலாளர் திருப்புவனம் மருது இராமன் முன்னிலையில் 7ஆம் ஆண்டு மாபெரும் அன்னதானம் திருப்புவனம் மருதமரத்தில் மருதுசேனை தலைவரின் கரு.ஆதி நாராயணத்தேவர் பொற்க்கரங்களால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.உடன் சிவகங்கை மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் கண்ணாருப்பு பாலா மற்றும் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப செயலாளர் மானாமதுரை சுந்தர் உடனிருந்தனர்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

இராமநாதபுரம், அக்.29-

மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு பாதுகாப்பு காரணம் கருதி இராமநாதபுரம் மாவட்ட எல்லைப் பகுதிகளில் 30.10.2025 அன்று ட்ரோன்கள் பறக்க தடைவிதிக்கப்படுகிறது.

எனவே 30.10.2025 அன்று தடையை மீறி டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## உலக சிக்கன நாள் தினம்

இராமநாதபுரம், அக்.29-

பொதுமக்களிடையே சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்ததையும் உணர்த்திடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் “ உலக சிக்கன நாள்” கொண்டாடப்படுகிறது. மக்கள் தங்கள் வாழ்நாளில் சிக்கனமாகச் செலவு செய்து, வருவாயில் ஒரு பகுதியை சேமிப்பாக்கி, எதிர்காலத்தில் பெரும் பயனடைந்து, வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதையே இந்த “ உலக சிக்கன நாள்” வலியுறுத்துகிறது.

வருவாயை உயத்தியும் செலவுகளை களைந்தும் திறம்பட வாழ வேண்டும் என்பதை அய்யன் திருவள்ளுவர் ‘வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை ஆராய்வான் செய்க வினை” என்ற குறட்பா மூலம் ‘வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்” என்று கூறியுள்ளார்.

பண்டைய காலங்களில் மண் உண்டியல் மூலம் சேமிக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. பாதுகாப்பற்ற அந்த முறையினின்றும் மாறி இன்று வங்கிளிலும் அஞ்சலகங்களிலும் சேமிக்கும் வாய்ப்புகள் பெருகியுள்ளன. இதன் மூலம் குடும்பத்திற்கு தேவையான அனைத்து செலவுகளும் எளிதில் எதிர்கொள்ள முடிகிறது. ‘சிறுதுளி பெருவெள்ளம்” என்னும் பழமொழிக்கேற்ப, சிறுக சேமித்து வந்தால் நாளடைவில் அது பெரும் செல்வமாகும். மேலும் தனிநபரின் நிதிநிலைத் தன்மையை அடையவும், நிதி நெருக்கடிகள் மற்றம் அவசர காலங்களில் நிதி சார்ந்து பாதுகாப்பாக இருக்;கவும், அனைவரும் அருகிலுள்ள அஞ்சலகத்தில் சேர்ந்து சேமிப்பு கணக்கினைத் துவங்கிட இந்த உலக சிக்கன நாளில் கேட்டுக்கொள்கிறேன். ‘செலவினை சுருக்கிடுவோம், சேமிப்பை பெருக்கிடுவோம்” என்னும் உறுதி கொண்டு சிறப்பாக வாழ்ந்திடுவோம்




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை இருப்புபாதை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி , துரை மற்றும் தலைமை காவலர் செல்வம், மணிகண்டன் ஆகியோர் நேற்று 27.10.25ம் தேதி இரவு சுமார் 8.30 மணி அளவில் வண்டி எண் 20498 அஜ்மீர் to ராமேஸ்வரம் விரைவு வண்டி மானாமதுரை இரயில் நிலைய நடைமேடை எண் 3 ல் வந்து நின்ற சமயம் வண்டியின் பின்புறம் இருந்து இரண்டாவது முன்பதிவுள்ள பெட்டியில் (S1) சோதனை செய்தபோது கழிவறை அருகே கேட்பாரற்று கிடந்த ஒரு வெள்ளை நிற சாக்கு பையில் சுமார் 14ளீரீ கிலோ குட்கா மற்றும் புகையிலைப் பொருட்கள் கேட்பாரற்ற நிலையில் இருந்ததைக் கைப்பற்றி விசாரிக்க உரிமை கோர யாரும் முன் வராத காரணத்தால் அதனை கைப்பற்றி நிலையம் கொண்டு வரப்பட்டு சிவகங்கை மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் வசம் ஒப்படைக்கப்பட உள்ளது.




## காளையார்கோவிலில் விளையாட்டு மையங்களின் கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டம்

சிவகங்கை, அக்.29-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் விளையாட்டு மையங்களின் கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டம் தலைவர் பக்கீர் முகைதீன் தலைமையிலும் செயலாளர் சூசை ஆரோக்கிய மலர் முன்னிலையிலும் நடைபெற்றது. விளையாட்டு மையங்களின் முதன்மை தூதுவர் லூயிஸ் லேவே வரவேற்புரை ஆற்றினார்.காளையார் கோவிலில் கடந்த ஐந்து மாதங்களாக காளையார் கோவிலை 12 விளையாட்டு மையங்களாக பிரித்து, அந்த மையங்களுக் கிடையே போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டுக் கூட்டமைப்பின் சார்பாக காளையார் கோவில் ஸ்போர்ட்ஸ் ஒலிம்பியாட் 2025 மிக சிறப்பாக நடைபெற்றது. ஸ்போர்ட்ஸ் ஒலிம்பியாட்டில் கிரிக்கெட், வாலிபால், செஸ், கேரம், கால்பந்து , இறகுபந்து மற்றும் அத்தலெட்டிக் போட்டிகள் நடைபெற்றது. வெற்றி பெற்ற அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்கள் நினைவு பரிசுகள், பதக்கங்கள் மற்றும் கோப்பை கள் வழங்கப்பட்டன. ஏறக்குறைய 1800 வீரர்கள் பரிசுகள் பெற்றனர். இந்த பொதுக்குழு கூட்டத்தில் பொருளாளர் சுரேஷ் காளையார் கோவில் ஸ்போர்ட்ஸ் ஒலிம்பியா 2025ல் வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தார். அடுத்த ஸ்போர்ட்ஸ் ஒலிம்பியாட் போட்டியானது 2027இல் நடைபெற இருக்கிறது. இதற்கான செயல் திட்டம் பொதுக்குழுவில் உருவாக்கப்பட்டது. ஜனவரி 2027 ஆம் ஆண்டில் மினி மாரத்தான் போட்டி நடத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுக்குழு கூட்டத்தில் துணைத் தலைவர்கள், துணைச் செயலாளர்கள், நிதிக்குழு உறுப்பினர்கள், 12 விளையாட்டு மையங்களின் முதன்மை தூதுவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். விளையாட்டு மையங்களின் முதன்மை தூதுவர் பத்மநாதன் நன்றியுரை ஆற்றினார்.







Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161